රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
**பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**
**Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government**

ඒකාබද්ධ සේවා අංශය
නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව.

**இணைந்த சேவைகள் பிரிவு**
சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை.

COMBINED SERVICES DIVISION
*Independence Square, Colombo 07, Sri Lanka*

| දුරකථනය<br>தொலைபேசி: **(94) 011- 2694560**<br>Telephone | ෆැක්ස්<br>தொலைநகல்: **(94) 011- 2692254**<br>Fax | ඊ-මේල්<br>மின்னஞ்சல்: **dgcs@pubad.gov.lk**<br>E-mail | වෙබ් අඩවිය<br>இணைத்தளம்: **www.pubad.gov.lk**<br>Web Site |
|---|---|---|---|


| මගේ අංකය<br>எனது இல<br>My No | CS/ICTS/01/EB Ex. (II) | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | | දිනය<br>திகதி:<br>Date | 2024.03.21 |
|---|---|---|---|---|---|

*அனைத்து அமைச்சின் செயலாளர்கள்/ஆணைக்குழுச் செயலாளர்கள்,*

*திணைக்களத் தலைவர்கள்/ மாவட்டச் செயலாளர்கள்/ பிரதேச செயலாளர்கள்,*

***<u>இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் உத்தியோகத்தர்களது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடல்</u>***

*இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப சேவையின் உத்தியோகத்தர்களது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைப் பெறுபேறுகள் இந்த அமைச்சின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படுவதுடன் அதற்கு மேலதிகமாக ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் தனித்தனியாக அறிவித்தல் மேற்கொள்ளப்படும்*

*02. தனித்தனியாக உத்தியோகத்தர்களுக்கு வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவது, நேரம் செலவிடப்படும் அநாவசியமானதும் மேலதிக செலவுகளை ஏற்படுத்துவதுமான செயற்பாடாக தென்பட்டுள்ளது. நிறுவனங்களின் தலைவர்கள் தங்கள் நிறுவன நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் தனித்தனியாக வெளியிடப்படும் பெறுபேறுகளின் அடிப்படையில் செயலாற்றப் பழகியிருப்பதனால் ஏதேனுமொரு வகையில் பெறுபேறுகள் அடங்கிய கடிதம் காணாமல் போனால் மீண்டும் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் போது தேவையற்ற தாமதங்கள் ஏற்படுவதாக அவதானிக்கப்பட்டுள்ளது. அதன்படி, எதிர்காலத்தில் பின்வருமாறு செயலாற்றும்படி தயவுடன் தெரிவித்துக்கொள்வதோடு இனிவரும் காலங்களில் அமைச்சு/திணைக்களம் மற்றும் அலுவலக மட்டத்தில் தனித்தனியாக வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட மாட்டாது என்பதையும் தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*I. ஏற்கனவே மேற்கொள்கின்ற வகையில், இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வர்த்தமானியிடப்பட்டு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தால் நடாத்தப்படும் இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தர்களின் அனைத்து வகுப்புகள் மற்றும் தரங்களுக்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைப் பெறுபேறுகள் இந்த அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட நடவடிக்கை எடுக்கப்படும்*

*II. பெறுபேற்று ஆவணத்தின்படி, குறித்த பரீட்சைக்குத் தோற்றிய, உங்கள் நிறுவனத்தில் பணிபுரியும் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தர்களுக்கு உங்கள் கையொப்பத்துடன் பெறுபேறுகளை வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளுங்கள். உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தல், பதவி உயர்வு போன்ற நிறுவன நடவடிக்கைகளுக்காக அனுப்பும்போது உரிய ஆவணங்களுடன் அக் கடிதத்தின் சான்றளிக்கப்பட்ட பிரதியை எனக்கு அனுப்பினால் போதுமானது.*

*III.* அமைச்சின் இணையத்தளத்தில் இருந்து பெறப்பட்ட உத்தியோகத்தரின் பெயரை உள்ளடக்கிய பெறுபேற்று ஆவணத்தின், உங்களால் சான்றளிக்கப்பட்ட பிரதியொன்றை உத்தியோகத்தரின் தனிப்பட்ட கோப்பில் கட்டாயம் சேர்க்க வேண்டும்.

*IV.* ஏற்கனவே மேற்கொள்கின்ற வகையில், வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைப் பெறுபேறுகளை, இந்த அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிட நடவடிக்கை எடுக்கின்றமையினால், இது தொடர்பில் உரிய உத்தியோகத்தர்கள் தனிப்பட்ட ரீதியில் கவனம் செலுத்த வேண்டும் என, உரிய உத்தியோகத்தர்களுக்குத் தெரிவிக்கவும்.

03. இது வரை இந்த அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள. 2023.06.04, 10 மற்றும் 11 ஆம் திகதிகளில் இடம்பெற்ற இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 3 தரம் I, வகுப்பு 3 தரம் II மற்றும் வகுப்பு 3 தரம் III இன் உத்தியோகத்தர்களது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாக மேற்கண்ட அறிவுறுத்தல்களின்படி செயலாற்றவும்.

04. உங்களது வசதிக்காக, இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின்படி ஒவ்வொரு வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையிலும் சித்தியடைந்தமை / சித்தியடையாமை என்பன தீர்மானிக்கப்படும் விதம் இத்துடன் உள்ள இணைப்பின் மூலம் காட்டப்பட்டுள்ளது.

ஒப்பம் / எஸ். ஆலோகபண்டார
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்

***இணைப்பு 01***

***இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 1 தரம் I இற்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை***

இலக்கம் *1894/26* மற்றும் *2014.12.26* ஆம் திகதிய சேவைப் பிரமாணக் குறிப்பின் அட்டவணை *15*

| **வினாப்பத்திரம்** | **மொத்தப் புள்ளிகள்** | **சித்திப் புள்ளிகள்** |
|---|---|---|
| *1.* தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பச் செயற்றிட்டம் | | |
| *I.* செயற்றிட்ட அறிக்கை | *60* | *30* |
| *II* செயற்றிட்ட அறிக்கை சமர்ப்பித்தல் | *40* | *20* |

***இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 1 தரம் II இற்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை***

இலக்கம் *1894/26* மற்றும் *2014.12.26* ஆம் திகதிய சேவைப் பிரமாணக் குறிப்பின் அட்டவணை *14*

| **வினாப்பத்திரம்** | **மொத்தப் புள்ளிகள்** | **சித்திப் புள்ளிகள்** |
|---|---|---|
| *1.* அலுவலக முகாமைத்துவம் | *100* | *40* |
| *2.* ஈ- அரசாங்க எண்ணக்கருவும் மற்றும் தகவல் தொழிநுட்ப முகாமைத்துவமும் | | |
| வினாப்பத்திரம் *I* – பல்தேர்வு | *40* | *16* |
| வினாப்பத்திரம் *II* – கட்டுரை | *60* | *24* |

***இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 1 தரம் III இற்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை***

இலக்கம் *1894/26* மற்றும் *2014.12.26* ஆம் திகதிய சேவைப் பிரமாணக் குறிப்பின் அட்டவணை *13*

| **வினாப்பத்திரம்** | **மொத்தப் புள்ளிகள்** | **சித்திப் புள்ளிகள்** |
|---|---|---|
| *1.* தாபன விதிக்கோவையும் மற்றும் நிர்வாகமும் | *100* | *40* |
| *2.* நிதிப் பிரமாணமும் மற்றும் அரசாங்கத் துறையின் நிதி முகாமைத்துவமும் | *100* | *40* |
| *3.* முகாமைத்துவமும் மற்றும் ஒழுங்கமைப்பும் | *100* | *40* |

***இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 தரம் I இற்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை***

இலக்கம் *1894/26* மற்றும் *2014.12.26* ஆம் திகதிய சேவைப் பிரமாணக் குறிப்பின் அட்டவணை *12*

| **வினாப்பத்திரம்** | **மொத்தப் புள்ளிகள்** | **சித்திப் புள்ளிகள்** |
|---|---|---|
| *1.* அலுவலக முறைகளும் மற்றும் நடைமுறைகளும் | *100* | *40* |
| *2.* தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம் ஈ-அரசாங்கம் | *100* | *40* |

**<u>இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 2 தரம் II இற்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை</u>**

இலக்கம் *1894/26* மற்றும் *2014.12.26* ஆம் திகதிய சேவைப் பிரமாணக் குறிப்பின் அட்டவணை *11*

| வினாப்பத்திரம் | மொத்தப் புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|
| *1.* தாபன விதிக்கோவை | *100* | *40* |
| *2.* நிதிப் பிரமாணம் | *100* | *40* |

**<u>இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 3 தரம் I இற்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை</u>**

இலக்கம் *1894/26* மற்றும் *2014.12.26* ஆம் திகதியசேவைப் பிரமாணக் குறிப்பின் அட்டவணை *10*

| வினாப்பத்திரம் | மொத்தப் புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|
| *1.* தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம் – எழுத்துப் பரீட்சை | *50* | *20* |
| *2.* தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம் – செய்முறைப் பரீட்சை | *50* | *20* |

**<u>இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 3 தரம் II இற்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை</u>**

இலக்கம் *1894/26* மற்றும் *2014.12.26* ஆம் திகதிய சேவைப் பிரமாணக் குறிப்பின் அட்டவணை *09*

| வினாப்பத்திரம் | மொத்தப் புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|
| *1.* அலுவலக முறைமைகளும் மற்றும் நடைமுறைகளும் | *100* | *40* |
| *2.* தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம் | *100* | *40* |

**<u>இலங்கைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 3 தரம் III இற்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை</u>**

இலக்கம் *1894/26* மற்றும் *2014.12.26* ஆம் திகதிய சேவைப் பிரமாணக் குறிப்பின் அட்டவணை *08*

| வினாப்பத்திரம் | மொத்தப் புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|
| *1.* தாபன விதிக்கோவை | *100* | *40* |
| *2.* நிதிப் பிரமாணம் | *100* | *40* |